நாணயச் சபை

இலங்கை மத்திய வங்கி

2016 ஒத்தோபர் | நுண்பாகநிதிச் சட்டப் பணிப்புரைகள் | 2016 இலக்கம் 04

## குறைந்தபட்ச திரவச்சொத்து விகிதத்தினைப் பேணுதல்

2016ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நுண்நிதியளிப்புச் சட்டத்தின் 11ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்டது.

1. குறைந்தபட்ச திரவச் சொத்து விகிதம்

1.1 ஒவ்வொரு உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனியும் மாதாந்த குறைந்தபட்சச் சராசரியாக அதன் மொத்த மாதாந்த வைப்புப் பொறுப்புக்களின் பதினைந்து (15%) சதவீதத்திற்குக் குறையாத தொகையினை எல்லா நேரங்களிலும் திரவச் சொத்தாகப் பேணுதல் வேண்டும்.

1.2 திரவச் சொத்துக்களின் விகிதத்தினைக் கணித்தல் பின்வரும் சூத்திரத்தினை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். திரவச் சொத்து விகிதத்தினைக் கணிக்கும் விபரம் இணைப்பில் தரப்பட்டுள்ளது.

$$\text{திரவச் சொத்து விகிதம்} = \frac{\text{மொத்தச் சராசரி திரவச் சொத்துக்கள் } * 100}{\text{மொத்த வைப்புக்கள்}}$$

2. மொத்தச் சராசரி திரவச் சொத்துக்கள்

2.1 ஒவ்வொரு உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனியும் பேணல் காலப்பகுதிக்கான பின்வரும் சொத்துக்களின் நாளாந்தச் சராசரியினைக் கூட்டுவதன் மூலம் சராசரி திரவச் சொத்தினை கணித்துக் கொள்ளமுடியும்.

அ) கையிலுள்ள பணம்

ஆ) ஏதேனும் வங்கியாளர்களின் பிணைக்கு அல்லது கட்டணத்திற்கு உட்படாத வர்த்தக வங்கிகளில் நடைமுறைக் கணக்கிலுள்ள மீதி

இ) ஏதேனும் வங்கியாளர்களின் பிணைக்கு அல்லது கட்டணத்திற்கு உட்படாத வர்த்தக வங்கிகளிலுள்ள வைப்புக் கணக்குகளிலுள்ள மீதி

ஈ) ஏதேனும் வங்கியாளர்களின் பிணைக்கு அல்லது கட்டணத்திற்கு உட்படாத சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளிலுள்ள வைப்புக் கணக்குகளிலுள்ள மீதி

உ) ஏதேனும் வங்கியாளர்களின் பிணைக்கு அல்லது கட்டணத்திற்கு உட்படாத இலங்கை அரசாங்கத்தின் திறைசேரி உண்டியல்கள்

ஊ) ஏதேனும் வங்கியாளர்களின் பிணைக்கு அல்லது கட்டணத்திற்கு உட்படாத ஓராண்டிற்குள் முதிர்ச்சியடைகின்ற இலங்கை அரசாங்கத்தின் திறைசேரி முறிகள்

எ) ஏதேனும் வங்கியாளர்களின் பிணைக்கு அல்லது கட்டணத்திற்கு உட்படாத ஓராண்டிற்குள் முதிர்ச்சியடைகின்ற இலங்கை அரசாங்கத்தின் பிணையங்கள்

ஏ) ஏதேனும் வங்கியாளர்களின் பிணைக்கு அல்லது கட்டணத்திற்கு உட்படாத ஓராண்டிற்குள் முதிர்ச்சியடைகின்ற மத்திய வங்கிப் பிணையங்கள்

ஐ) ஏதேனும் வங்கியாளர்களின் பிணைக்கு அல்லது கட்டணத்திற்கு உட்படாத ஓராண்டிற்குள் முதிர்ச்சியடைகின்ற நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் வைத்திருக்கப்படும் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள்

3. குறைந்தபட்சத் தேவைப்பாடுகளை பேணுவதற்கான மேற்பார்வைத் தலையீடுகள் மற்றும் நடவடிக்கைகள்

3.1 உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகளின் திரவத்தன்மை குறைந்தபட்சத் தேவைப்பாடுகளுக்குக் கீழே வீழ்ச்சியடைகையில் அதனைத் தடுக்கும் விதத்தில் அதன் ஆரம்பக் கட்டத்திலேயே இலங்கை மத்திய வங்கி தலையீடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

3.2 பணிப்புரை 1இல் குறிப்பிடப்பட்ட குறைந்தபட்சத் திரவத்தன்மைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்ய உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனி தவறியிருக்குமிடத்து, திரவத்தன்மையின் தேவையான மட்டத்திலிருந்தும் குறைகின்ற தொகையின் மீது அத்தகைய உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனி நாளொன்றிற்கு 0.1 சதவீதத்தினை அல்லது ரூபா இருபத்தையாயிரத்தை (ரூ.25,000) இதில் எது குறைந்ததோ அத்தொகையை குறைந்தபட்சத் தேவைப்பாடு நிவர்த்தி செய்யப்பட்டு பணிப்பாளர், நுண்பாக நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தினால் உறுதிப்படுத்தப்படும் வரை இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்துதல் வேண்டும்.

4. ஒழுங்குமுறைப்படுத்தல் அறிக்கையிடல்

4.1 ஒவ்வொரு உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனியும் பணிப்பாளர்/ நுண்பாக நிதிக் கம்பனிகள் மேற்பார்வைத் திணைக்களத்திற்கு இங்கே இணைக்கப்பட்டுள்ள அறிக்கையிடல் படிவத்தில் காணப்படுகின்றவாறு ஒவ்வொரு மாதமும் முடிவடைவதிலிருந்து பதினைந்து (15) நாட்களுக்கிடையில் மாதாந்த அடிப்படையில் திரவச்சொத்து விகித அறிக்கையினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவர்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்**

இணைப்பு

இலிருந்து :

சேரல் : நுண்பாக நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர்
இலங்கை மத்திய வங்கி

## நியதி திரவச் சொத்து விகிதம்

ரூ.'000

| | | |
|---|---|---|
| 1. | ........... மாதம் (அடிப்படைத் திகதி) ........... ஆம் திகதி இறுதி வேலை நாளன்று உள்ளவாறான மொத்த வைப்புக்கள் | ...................... |
| 2. | ........... மாதத்திற்கான (பேணல் காலம்) சராசரி நியதி திரவச் சொத்துக்கள் | ...................... |
| | அ) காசு | ...................... |
| | ஆ) ஏதேனும் வங்கியாளர்களின் பிணைக்கு அல்லது கட்டணத்திற்கு உட்படாத வர்த்தக வங்கிகளிலுள்ள நடைமுறைக் கணக்கிலுள்ள மீதி | ...................... |
| | இ) ஏதேனும் வங்கியாளர்களின் பிணைக்கு அல்லது கட்டணத்திற்கு உட்படாத வர்த்தக வங்கிகளிலுள்ள வைப்புக் கணக்கிலுள்ள மீதி | ...................... |
| | ஈ) ஏதேனும் வங்கியாளர்களின் பிணைக்கு அல்லது கட்டணத்திற்கு உட்படாத சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளிலுள்ள வைப்புக் கணக்கிலுள்ள மீதி | ...................... |
| | உ) ஏதேனும் வங்கியாளர்களின் பிணைக்கு அல்லது கட்டணத்திற்கு உட்படாத இலங்கை அரச திறைசேரி உண்டியல்கள் | ...................... |
| | ஊ) ஏதேனும் வங்கியாளர்களின் பிணைக்கு அல்லது கட்டணத்திற்கு உட்படாத ஓராண்டிற்குள் முதிர்ச்சியடைகின்ற இலங்கை அரச திறைசேரி முறிகள் | ...................... |
| | எ) ஏதேனும் பிணைகள் அல்லது கட்டணத்திற்கு உட்படாத ஓராண்டிற்குள் முதிர்ச்சியடைகின்ற இலங்கை அரச பிணையங்கள் | ...................... |
| | ஏ) ஏதேனும் வங்கிகளின் பிணைகள் அல்லது கட்டணத்திற்கு உட்படாத ஓராண்டிற்குள் முதிர்ச்சியடைகின்ற மத்திய வங்கிப் பிணையங்கள் | ...................... |
| | ஐ) ஏதேனும் வங்கிகளின் பிணைகள் அல்லது கட்டணத்திற்குட்படாத ஓராண்டிற்குள் முதிர்ச்சியடைகின்ற அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் வைத்திருக்கப்படும் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள். | ...................... |
| 3. | **திரவச் சொத்து விகிதம் [(1) இன் % மாக 2]** | ...................... |

மேற்குறிப்பிட்ட கூற்றுக்கள் சரியானவையென்றும் இக்கம்பனியில் ஏடுகளுக்கிணங்கக் காணப்படுவதாகவும் நான்/ நாங்கள் உறுதிப்படுத்துகின்றோம்.

.......................................................................................

திகதி: ..................................

*அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்*

**குறிப்பு:** அடிப்படைத் திகதியென்பது முன்னைய மாதத்தின் இறுதி வேலை நாளாகும். உதாரணமாக ஏப்பிறல் மாதத்திற்கான திரவச் சொத்துக்கள் மாச்சு மாத இறுதியின் வைப்புப் பொறுப்புக்களை அடிப்படையாகக் கொண்டிருக்கும். திரவச் சொத்துக்கள் பேணப்பட வேண்டிய காலம் (பேணல் காலம்) அடிப்படைத் திகதி காணப்படும் மாதத்தினைத் தொடர்ந்துவரும் கலண்டர் மாதத்தின் 1ஆவது வேலை நாளிலிருந்து தொடங்கி இறுதி வேலை நாள் வரையுள்ள காலப்பகுதியாகும்.